திருவேற்காடு நகராட்சிப் பகுதியில்

# 12.45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின்மாற்றி!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் ஆக 18;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் பொதுமக்கள் மின் அழுத்தத்தை போக்க புதிய மின்மாற்றி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த நிலையில் அதற்கான பணிகளை மேற்கொண்டு புதிதாக மின்மாற்றி 2 வது வார்டு சுந்தர விநாயகர் நகர் பகுதியில் மற்றும் 13 வது வார்டு ராம் நகர் பகுதியில் 1 வது வார்டு அரவிந்தன் நகர் பகுதிகளில் 12.45 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு புதிய மின்மாற்றிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அப்போது பொதுமக்கள் புதிய மின்மாற்றி அமைத்து தந்ததற்கு தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசருக்கு மற்றும் மின்துறை அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவேற்காடு நகரமன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் தட்சிணமூர்த்தி, சுரேந்தர், மின்வாரிய பொறியாளர் கலைவேந்தன், ஜெயபிரகாஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், கவுன்சிலர்கள்

வட்டக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் ஜெ.சரவணன், எஸ்.சங்கர், காஜா, ஆசீர்வாதம், குமார், பி.வி.கே.கண்ணன், சாந்திராஜா, இளையராஜா, துரை கோபால், பரிசமுத்து, சத்தியாகிரி, பொன்.மனோகர், என்.ராஜ், காந்தி, இளங்கோ, வழக்கறிஞர்கள் சதீஷ், பாலாஜி, எம்.சுரேஷ், நாராயணன், நரேஷ், உள்பட பலர் உள்ளனர்.

---

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்! வேளச்சேரி - 175வது வார்டு மாமன்ற உறுப்பினர்

# மகேஸ்வரி முருகவேலின் - வார்டு மேம்பாட்டு நிதியில் நிறைவுற்ற பணிகள் தொடக்க விழா!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – மேயர் பிரியாராஜன் – துணை மேயர் மு.மகேஷ்குமார் – அரிமா சு.சேகர் பங்கேற்பு!

சென்னை, ஆக. 18-

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 13 வார்டு - 175 மகேஸ்வரி முருகவேல் எம்.சி. வார்டு மாமன்ற உறுப்பினரின் மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரிய 3வது அவென்யு குடியிருப்பில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் நியாய விலை கடை கட்டப்பட்டது.

கக்கன் நகரில் 30 லட்சம் மதிப்பில் நியாய விலைக் கடை கட்டப்பட்டது.

கக்கன் நகர் பிரதான சாலையில் ரூ.11 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் புதிய நிழற்குடை அமைக்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்கர் நகர் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் ரூபாய் 4 லட்சம் மதிப்பில் உயர் சிறிய கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டது.

இவற்றின் திறப்பு விழா நாளை (19.8.2024 - திங்கள்) காலை 10.00 அளவில், மேற்படி திட்டங்கள் கட்டப்பட்ட இடங்களில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு, வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் - முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி., எஸ்.பாஸ்கரன் எம்.சி., வே.ஆனந்தம் எம்.சி., 175வது வட்டச் செயலாளர் க.பாரதிதாசன், 175 'அ' வட்டச் செயலாளர் வி.சக்திவேல் உள்பட பலரும் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடி கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிடுமாறு 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

---



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசனைக் கூட்டம் பகுதி செயலாளர்,மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி தலைமையில் வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையில் ப.காளேஸ்வரன், ஆர்.உமாசங்கர், என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி,பி.ஜே. வேந்தன், என்.கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர்.கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பகுதி பொறுப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் ஆலோசனை வழங்கினார். இதில் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, வட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், மு.இன்பசேகர், என்.காந்தி,எச்.முகமது அப்பாஸ்,எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர் உள்ளிட்ட கலந்து கொண்டனர். செ.அமிர்தராஜ் நன்றி உரையாற்றினார்.





